தமிழகத்திற்கு பெருமை தேடித் தரும் வகையில் அந்த சாதனையைப் புரிந்துள்ளார். தமிழகம் எங்கும் நல்ல விளையாட்டு வீரர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்கிற வகையில். அந்த பெடரேஷன் கோப்பையை வென்ற அந்தக் குழுவின் தலைவரை சட்டமன்ற பேரவைத் தலைவர் அழைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து, விருந்து அளிக்க மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல கருத்து, ஆலோசிக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்கிறேன்.

[முற்பகல் 9.50]

ஆ. வேளாண்மைத் துறை தொழில் நுட்ப அலுவலர்கள் உண்ணாவிரதம்

திரு எம். தங்கவேல்ராஜ்: தலைவரவர்களே, தற்போது தமிழ்நாடு வேளாண்மைத் துறை தொழில் நுட்ப அலுவலர்கள் சில கோரிக்கைகளை வைத்து, அதற்காக 2.5.81 முதல் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பற்றி தனியாக கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ அல்லது ஒத்தி வைப்புத் தீர்மானமாகவோ கொண்டு வாருங்கள்.

திரு. சே. அழகர்சாமி: தலைவரவர்களே, வேளாண்மை தொழில் நுட்ப அலுவலர்கள் 5 நாட்களுக்கு மேலாக சாகும்வரை உண்ணாவிரதம் என்ற போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அது பற்றி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் போலீஸ் நிலையத்தில் ஒருவர் செத்துவிட்டது பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. நாம் தினந்தோறும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல ஒத்தி வைப்புத் தீர்மானங்களையும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் கொடுத்திருக்கிறார்கள். அவைகளுக்கு முதலில் பதில் வரவேண்டும். வந்தபின்னால் அதிகமான தீர்மானங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமானால் அலுவல் ஆய்வுக்குழுவில் முடிவு செய்ய வேண்டும். ஆகவே, இன்றைக்கு பகல் 12 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவை கூட்ட இருக்கிறேன். அதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால் அதன்படி நான் அவையை நடத்திச் செல்ல தயாராக இருக்கிறேன்.

திரு. சே. அழகர்சாமி: தலைவரவர்களே, ஆசிரியர்கள் மறியல் போராட்டம் நடத்தி, ஏராளமானவர்கள் உள்ளே இருக்கிறார்கள். அதுபற்றி....

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி எல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசலாம். அதோடு, இன்றைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வரவில்லை. அவருடைய வேண்டுகோளுக்கிணங்க அவர் சம்பந்தப்பட்ட வினாக்களை இன்றைக்கு ஒத்தி வைத்திருக்கிறேன். சம்பந்தப்பட்ட அமைச்சர் இல்லாத போது, இப்படி திடீரென்று ஒரு பிரச்சனையை எழுப்பி, எப்படி அதற்கான பதிலை பெற முடியும்?

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, நாம் மூன்று மாதங்களாக சட்டமன்றப் பேரவையை நடத்திக்கொண்டிருக்கிறோம். இன்னும் மூன்று நாட்கள்தான் இந்தத் தொடர் கூட்டம் நடைபெற இருக்கிறது. ஆனால் முடிவு பெறாத பிரச்சனைகள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனால்தான் ஏற்கெனவே சொன்னேன், இன்றைக்கு நடைபெற இருக்கின்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடிப் பேசி, முடிவு செய்து, அதன்படி பிரச்சனைகளை எடுத்துக்கொள்ளலாம்.

3. ஒத்திவைப்பு தீர்மானம்

குளச்சல் காவல் நிலையத்தில் ஒருவர் மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் காவல் நிலையத்தில் 16.4.81-ல் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட டேவிட் ராஜ் என்பவர் காவல் நிலையத்தில் இறந்ததால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்னும் தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கோரும் திருவாளர்கள் டி. மணி என். பழனிவேல், ஜெ. ஹேமச்சந்திரன், ரா. கிருஷ்ணன் ப. பொன்னுரங்கம், எஸ் இராஜதுரைராஜ், பாபு ஜனார்த்தனம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற செங்குட்டுவன் ஆகியோர் முன்னறிவிப்பு கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியம் என்பது குறித்து சுருக்கமாக கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. டி. மணி

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல்காவல் நிலையத்திற்கு அரியவிளையைச் சேர்ந்த திரு. டேவிட் ராஜ் என்பவரை 17.4.1981 அன்று, ஒருநபர் கொடுத்த மனுவை ஆதாரமாகக் கொண்டு, சந்தேகத்தின் பெயரில் போலீசார் அழைத்துக் கொண்டு சென்றார்கள். அந்தக் கைதியை மிருகத்தனமாக அடித்ததன் விளைவாக 4 திங்கள் கழித்து இறந்து விட்டார் என்று எங்களுக்கு செய்தி கிடைத்திருக்கிறது. இரண்டாவது நாளே அந்தக் கைதி பல்வேறு ரத்தக்காயங்களோடு காட்சியளித்தார் என்றும் தெரிகிறது. அந்தக் கைதியை அவருடைய மனைவியார் பார்க்க வந்தபோது அந்த லாக்கப்பின் உள்ளேயே, அவர் பலவித ரத்தக்காயங்களோடு காட்சியளித்தார் என்றும் அதனால் அவரை